
செய்தி இதழாகப் பதிவு பெற்றது

# தந்தி

இல: 1086 — 1970 ஜூலை 20 திங்கட்கிழமை — ★ விலை சதம 5

University of Sri Lanka Library
RECEIVED
1972-7-8
Periodicals Division



நவ அரங்குசாலையில் நேற்று அரசமைப்பு நிர்ணயசபையின் முதலாவது கூட்டத்தை அங்குரார்ப்பணம் செய்துவைத்துப் பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா உரை நிகழ்த்துவதைப் படத்தில் காண்க. (க)

## மாவை கந்தசுவாமி ஆலயத்தில்

# பொலீஸ் ஆக்கிரமிப்பு அர்த்தமற்ற செயல்

## உதவிக் கலாசார அமைச்சர் கூறுகிறார்

**தெல்லிப்பழை, ஜூலை 19**

**"மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தைப் பொலீசார் ஆக்கிரமித்து இருப்பது அர்த்தமற்ற செயலாகும். இதன் காரணமாக, பிரசித்தி பெற்ற ஆலயம் ஒன்றின் உற்சவம் நடைபெறாமல் தடைபட்டு இருப்பதையிட்டு மிகவும் வருந்துகிறேன்."**

மேற்கண்டவாறு கூறினார் உதவிக் கலாசார அமைச்சர் திரு. சோமவீர சந்திரசிறி.

நேற்று இரவு எட்டுமணிக்கு மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்திற்கு விஜயம்செய்த உதவி அமைச்சர், ஆலயப் பிரவேசம் சம்பந்தமாகப் பேச்சுவார்த்தைகள் நடத்தினார்.

இப் பேச்சுவார்த்தைகளின் போது, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வடபிரதேச அமைப்பாளர்களான திரு. எம். துரைராஜா, திரு. எம். நடராஜா, அகில இலங்கை சைவ சித்தாந்த சபைத் தலைவர் திரு. பாலசுந்தரக் குருக்கள், பிரம்ம ஸ்ரீ சு. து. சண்முகநாதக் குருக்கள், திரு. சி. சுந்தரலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

உதவி அமைச்சர் திரு. சந்திரசிறி பேசுகையில் கூறியதாவது:—

"இந்த ஆலயத்தில் பொலீசார் ஆக்கிரமிப்புச் செய்துள்ளது அர்த்தமற்ற செயலாகும். இதன் காரணமாக பிரசித்திபெற்ற இவ்வாலயத்தின் உற்சவம் நடைபெறாமல் தடைபட்டிருப்பதையிட்டு மிகவும் வருந்துகிறேன். நான் கொழும்புக்குத் திரும்பியதும், இதுசம்பந்தமாக பிரதமருக்கும், உயர் அதிகாரிகளுக்கும் எடுத்துக்கூறி; தகுந்த நடவடிக்கை எடுப்பேன்" என்று கூறினார்.

திரு. சி. சுந்தரலிங்கம், மாவிட்டபுரத்தில் பொலீசாரின் கெடுபிடிகள் அதிகரித்திருப்பதாக உதவி அமைச்சரிடம் எடுத்துக் கூறினார். இது சம்பந்தமாக தாம் வடபகுதிப் பொலீஸ் அதிபருடன் கலந்து பேசி, உடன் நடவடிக்கை எடுப்பதாக உதவி அமைச்சர் உறுதியளித்தார்.

மேலும், இம்மாதம் 21-ம் திகதி காலை 9-30 மணிக்கு மீண்டும் மாவிட்டபுரத்துக்கு வந்து, ஆலயப் பிரவேசம் சம்பந்தமாகத் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்த இருப்பதாகவும் உதவி அமைச்சர் கூறினார். (க—290)

## அமைச்சரின் புதிய திட்டம்

தாழ்ந்த பிரதேசங்களை அபிவிருத்தி செய்து வீடமைப்புத் திட்டங்களுக்குப் பயன்படுத்த வேண்டிய திட்டம் ஒன்றை, நீர்ப்பாசன, மின்சார, பெருந்தெருக்கள் அமைச்சர் திரு. மைத்திரிபால சேனநாக்கா வகுத்திருக்கிறார்.

கொழும்பு மாவட்ட தாழ்ந்த பிரதேச அபிவிருத்தி சபையின் முதல் கூட்டத்தில் உரையாற்றுகையில் அமைச்சர் இத் தகவலை வெளியிட்டார்.

அபிவிருத்தி சபை லாபத்தில் இயங்காவிட்டாலும் தனது செலவினங்களை ஈடுசெய்யக்கூடியதாக இருக்க வேண்டும் என அமைச்சர் கருத்துத் தெரிவித்தார். (க)

### மீனாட்சி



என்னுங்க, கொழும்பில் ஓடும் டாக்ஸிகளின் மீட்டர்களை யாராவது சோதித்தது உண்டா?

ஆமாங்க, சோதித்திருந்தால் இப்படிக் கொள்ளை அடிப்பாங்களா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ‘தொடர்பை மறைக்கவே இந்த அபாண்டம்’

# மாணவனுடன் மனைவி அந்தரங்க உறவாம்

### தாபரிப்பு வழக்கில் கணவன் சாட்சியம்

“ஒரு பள்ளி மாணவனுடன் என் மனைவிக்கு ஏற்பட்டிருந்த அந்தரங்க தொடர்பு காரணமாக அவள் என்னை வெறுத்தாள்- அதை மறைப்பதற்காக என் மீது அபாண்டமான பழிகளைச் சுமத்துகிறாள்” -

எதிர் மனுதாரரான முகம்மது குலாம், கொழும்பு மாஜிஸ்திரேட் திரு. ஈ. எவ். டீ. சில்வா முன்னிலையில் நடைபெற்ற தாபரிப்பு வழக்கொன்றில் சாட்சியம் அளிக்கும் போது மேற்கண்டவாறு கூறினார்.

செல்லம்மா என்னும் பெண் தனக்கும் தன் பிள்ளைகளுக்கும் தாபரிப்பு கோரி தன் கணவன் முகம்மது குலாமுக்கு எதிராக இந்த வழக்கைத் தாக்கல் செய்து உள்ளார்.

எதிர் மனுதாரர் முகம்மது குலாம் சாட்சியம் அளிக்கையில் மேலும் கூறியதாவது:—

“மனுதாரர் கூறுவதெல்லாம் பொய். எனக்கு நிரந்தரமான தொழில் கிடையாது. சில்லறை வேலை செய்து சீவிக்கிறேன். தாபரிப்பு கட்டும் நிலையில் நானில்லை. அவள் விரும்பி வந்தால் நான் ஏற்றுக் கொள்ளத் தயார்” என்று கூறினார்.

மனுதாரரின் வழக்கறிஞர்: பல காரணங்களை முன்னிட்டு மனுதாரர் கணவனுடன் வாழ விரும்பவில்லை. எதிர்மனுதாரர் ஒரு சதமும் கொடுப்பது இல்லை. தினமும் குடித்து விட்டு வந்து தொல்லை கொடுக்கிறார்.

கணவனின் வழக்கறிஞர்:- சுத்தப் பொய். அவளுக்கு எல்லா சௌகரியங்களும் செய்து கொடுக்கப்பட்டன. அவள் பிரிந்திருப்பதின் காரணம் எங்களுக்குத் தெரியும். இப்பொழுது வந்தாலும் நாம் ஏற்கத் தயார்”.

செல்லம்மா சாட்சியம் அளிக்கையில் தன் கணவன் ஆசைநாயகி ஒருத்தியை வைத்திருப்பதாகவும், அவளுக்கே அவரின் ஊதியத்தைச் செலவிடுவதாகவும் கூறினாள்.

மேல் விசாரணையை ஆகஸ்ட் 20-ந் திகதிக்கு நீதவான் ஒத்தி வைத்தார். (ஐ-15)

### தொட்டிலில்கிடந்த குழந்தை வீட்டோடு எரிந்து மரணம்

மன்னார், ஜூலை 18

வீட்டில் ஏற்பட்ட திடீர் தீயில் தொட்டிலில் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த பச்சிளம் குழந்தை ஒன்று தொட்டிலுடன் கருகி மாண்டது.

உயிலங்குளத்தில் நடந்த நெஞ்சை உருக்கும் இச் சம்பவத்தில் ஜெகதீஸ்வரி என்னும் குழந்தையே பலியானது.

இதுபற்றி கூறப்படுவதாவது:- ஜெகதீஸ்வரியின் தந்தையான காத்தவராயன் அதிகாலையில் வயலுக்குச் சென்று விட்டார். அவரின் மனைவி கணவருக்கு மதிய உணவு தயாரித்து எடுத்துக் கொண்டு வயலுக்குச் சென்று விட்டாராம்.

வீட்டில் காத்தவராயனின் நான்கு சிறிய குழந்தைகளே இருந்தனராம். திடீரென வீடு தீப் பற்றிக் கொள்ளவே அச்சமுற்ற மூன்று குழந்தைகளும் தப்பி வெளியே ஓடி வந்துவிட்டனர்.

அவ்வேளை உதவிக்கு ஓடிவந்த அயலவர்களாலும் தொட்டிலில் தூங்கிக் கொண்டிருந்த கைக் குழந்தை ஜெகதீஸ்வரியைத் தீயிலிருந்து காப்பாற்ற முடியவில்லை என்று கூறப்பட்டது.

வீடும் பொருட்களும் எரிந்து முற்றாகச் சேதம் அடைந்துள்ளன. (ர-185)

### ஆறுவருடகாலவயிற்றுவலி ஆரோக்கிய மேரி தீக்குப்பலி

பதுளை, ஜூலை 15

ஆறு வருடம் வயிற்றுவலியால் அவதிப்பட்ட இளம் மனைவி ஒருத்தி தனக்குத் தானே தீமூட்டிக் கொண்டு தற்கொலை செய்து கொண்ட சம்பவம் தெமோதரை ஓதும்பை என்ற இடத்தில் நடந்துள்ளது.

பதுளை மரண விசாரணை அதிகாரி திரு. பி. பி. ரட்ணயக்க இதுபற்றி விசாரணை நடத்தினார்.

சின்னத்தம்பி ஆரோக்கியமேரி (வயது 33) என்ற பெண்மணியே இக்கதிக்கு ஆளானவர்

காலஞ்சென்றவரின் கணவர் செல்லம் அந்தனி சாட்சியம் அளிக்கையில் தான் மேரியை 13 வருடங்கட்கு முன் திருமணம் செய்ததாகவும், கடந்த ஆறு வருடமாக அவளுக்கு வயிற்றுவலி இருந்ததாகவும் சொன்னார்.

சம்பவ தினத்தன்று தான் தோட்டக் கடைக்கு போனதாகவும், அப்போது தனது மனைவி மேல் தீப்பிடித்ததாக பலர் சத்தமிட்டு ஓடி வந்ததாகவும் சொன்னார்.

தான் போய்ப் பார்த்தபோது மனைவியின் உடலில் தீப்பிடித்து இருந்ததாகவும், தண்ணீர் ஊற்றி அணைத்ததாகவும் கூறினார்.

பிறகு சில மணி நேரங்களில் உயிர் பிரிந்ததாக அவர் தெரிவித்தார்.

தற்கொலை என்று தீர்ப்பு கூறப்பட்டது. (ஐ-278)

### கண்டிப்பைவிரும்பாதகன்னி நஞ்சு குடித்துத் தற்கொலை

இளைஞர்களுடன் நெருங்கிப் பழகிய இளம் கன்னியைத் தாய் கண்டித்தாள். கண்டிப்பை விரும்பாத கிராமத்துக் கன்னி நஞ்சு குடித்து உயிரை மாய்த்துக் கொண்டாள்.

பொல்கும்பொல தெவிட்டியா கலையைச் சேர்ந்த எல். டீ. சந்திராவதி என்பவளே தற்கொலை செய்து கொண்ட இளம் பெண்ணவாள்-

அவளின் மரணத்தையிட்டு அகலவத்தை திடீர் மரண விசாரணை அதிகாரி விசாரணை நடாத்தினார்.

இறந்த பெண்ணின் தாய் வட்டகே ஜெஸி நோனா சாட்சியம் அளிக்கையில் கூறியதாவது:—

“என் மகள் கிராமத்து வாலிபர்கள் பலருடன் சிநேகமாய் இருந்தாள். சம்பவம் நடைபெற்ற அன்று, என் மகளை இருமுறை அடித்து விட்டு வாலிபர்களுடன் கதைக்க வேண்டாம் என்று கூறினேன். பின்னர் விறகு பொறுக்கச் சென்றேன்.

“சிறிது நேரத்தில் வீட்டுப் பக்கமிருந்து சத்தம் கேட்டது. அங்கு ஓடினேன்.

தான் நஞ்சு குடித்து விட்டதாக என் மகள் கூறினாள். ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனேம்- ஆனால் அவள் பிரிந்து விட்டாள்” என்று கூறினாள்.

தற்கொலை என மரண விசாரணை அதிகாரி தீர்ப்பளித்தார். (ஐ-15)

### இரத்தினசாரி டோக்கியோ செல்வார்

ஜாகர்த்தா, ஜூலை 19

தற்பொழுது பாலித் தீவில் விடுமுறையைக் கழித்துக் கொண்டிருக்கும், காலஞ் சென்ற சுகார்னோவின் மூன்றாவது மனைவியான இரத்னசாரிதேவி அடுத்த மாதம் டோக்கியோ செல்வார்.

### பொறித்துவக்கு பலி எடுத்தது

பதுளை, ஜூலை, 19

காட்டுப் பன்றிகட்காக வைத்த பொறித்துவக்குக்கு ஒருவர் தானே பலியான சம்பவம் இழுக்பலஸ்ஸ என்ற இடத்தில் நடந்துள்ளது.

பதுளை மரண விசாரணை அதிகாரி திரு. பி. பி. ரத்னயக்க நடத்திய விசாரணைகளில் இது தெரிய வந்தது.

சார்லி பொன்சேகா (வயது 57) என்பவர் தோட்டத்தை அழித்து வந்த காட்டுப் பன்றிகளைக் கொல்ல வைத்த பொறித்துவக்கு பகலில் தற்செயலாக வெடித்ததாலேயே அவர் மரணமானார்.

விபத்து மரணம் என்று மரண விசாரணை அதிகாரி தீர்ப்பளித்தார். (ர-278)

### கால தாமதம் கூடாது

அரசாங்க சேவையில் நாற்பதினாயிரம் பேருக்கு விரைவில் வேலை கிடைக்கக் கூடிய சாத்தியக் கூறுகள் தென்பட்டுள்ளன. அமைச்சர் திரு. பீலிக்ஸ் டையஸ் பண்டாரநாயக்கா அவர்களும் இக் காலியான இடங்களுக்கு ஆட்களை நியமிப்பதற்கு வல்விரைவில் நடவடிக்கைகள் எடுப்பதாக உறுதி அளித்துள்ளார். வேலையில்லாத் திண்டாட்டம் நாட்டைப் பெரிதும் வருத்தும் இவ்வேளையில் இத்தனை பேருக்காவது வேலை கிடைப்பது பெரிதும் உதவியளிக்கும் என்பதற்கு யாதும் சந்தேகமில்லை. ஆனல், இதனைக் கால தாமதமின்றி நிறைவேற்றுதல் வேண்டும்.

தந்தி

### கடற்கரையில் சாராயம் வடித்தவருக்கு அபதாராம்

மன்னார், ஜூலை 19

கடற்கரையில் சாவகாசமாக வடிசாராயம் தயாரித்துக் கொண்டிருந்த நபர் ஒருவர், பொலீசாரின் திடீர் முற்றுகையின் போது பிடிபட்டார்.

இதைத் தொடர்ந்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் எதிரியான மிகுந்துகுலசூரிய அந்தோனி பர்னந்து என்பவர் தமது குற்றத்தை ஒப்புக் கொள்ளவே, மன்னார் நீதவான் திரு. எம். பி. ஜீ. திசாநாயக்கா அவருக்கு ரூ. 130 அபராதம் விதித்தார்.

அண்மையில் தலைமன்னார் பொலீஸ் அதிகாரி திரு. ஜீ. டபிள்யூ. பீட்டர், தலைமன்னார் பகுதியைச் சேர்ந்த உப்புத்தரவை என்னும் பகுதியில் ரோந்து சுற்றி வருகையில், எதிரி கடற்கரையில் கசிப்பு தயாரித்துக் கொண்டிருப்பதைக் கண்டு அவரைக் கைது செய்தார்.

நான்கு போத்தல் கசிப்பு, ஆறு கலன் கோடா, கசிப்பு தயாரிப்புக்குப் பாவிக்கப்பட்ட உபகரணங்கள் ஆகியவற்றையும் அவர் கைப்பற்றினர். (ஐ-185)


### தந்தி சிறு விளம்பரங்கள்

#### வசியம

காதலில் வெற்றியை எதிர் பார்ப்பவர்களுக்கு தவறாத மலையாளி வசிய பரிகாரம். மூன்று நாட்களில் பலன் கிடைக்கும், இருவரின் பெயர்களுடன் இலவச விபரங்களுக்கு எழுதுங்கள்: சிவபாலன், குப்த வித்தியாதனய, ஊருப்பொலை.

R. 68317

#### மருந்து

மதன சஞ்சீவி லேகியம் (ஆண்களுக்கு மட்டும்). பாலிய சேஷ்டையினாலோ அல்லது அதிக சம்போகத்தினாலோ வீரியம், ஆண்மை குறைந்தவர்களுக்கும் (SEXUAL DEBILITY) சக்தியை இழந்தவர்களுக்கும் இழந்துபோன சக்தியை மீட்டு, புதிய சக்திக்கும், திரேக வளர்ச்சிக்கும், குடும்ப வாழ்க்கைக்கும் சிறந்த லேகியம். ஒரே புட்டியில் குணம் காணலாம். மதன சஞ்சீவி, ஒரு ருத்தல் ரூ. 23/- ½ ருத்தல் ரூ. 12/- வி. பி. பி. ஆடர் கவனிக்கப்படும். முருகானந்தா வைத்தியசாலை, 104, செட்டியார் தெரு, கொழும்பு – 11.

#### வைத்தியம்

எவ்வளவு நாள்பட்ட வியாதியானாலும் சரி, பிற வைத்தியங்கள் செய்து குணப்படாமல் கைவிடப்பட்டதானாலும் சரி, ஊசி ஏற்றி குணப்படாமல் இருந்தாலும் சரி, இனி காலதாமதம் செய்யாமல் நேரில் கண்டு ஆலோசியுங்கள். நேரில் வர முடியாது போனால் கடிதம் மூலம் தொடர்பு கொள்ளுங்கள். ஆலோசனை இலவசம். முருகானந்தா வைத்தியசாலை, 104, செட்டியார் தெரு, கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பாடசாலைக்கும் என்னைக் கூட்டிப் போனார்

# மணப்பேன் என்று கூறி கர்ப்பிணியாக்கி விட்டார்

## கண்டி நீதிமன்றத்தில் இளம் பெண் சாட்சியம்

"எதிர் மனுதார் சின்ன வயதில் என்னைத் தூக்கி அணைத்துக் கொள்வார். பாடசாலைக்கும் கூட்டிப் போனார்- வளரும் போதே இருவருக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது- திருமணம் செய்வதாக உறுதி அளித்து நெருங்கிப் பழகினார். இதன் பலனாக அவரால் எனக்கொரு குழந்தை பிறக்க இருந்தது- அப்போது அவர் என்னைக் கைவிட்டுப் போனார்".

கண்டி மாஜிஸ்திரேட் திரு. எம். பி- ஜி. பெர்னாண்டோ முன்னிலையில் விசாரணைக்கு வந்த தாபரிப்பு வழக்கு ஒன்றில் சாட்சியம் அளித்த மனுதாரரான இளம் பெண் மேற்கண்டவாறு கூறினார்.

கலகெதர, களுவான கிராமத்தைச் சேர்ந்த எஸ். ஜி. முத்துமெனிக்கே என்பவர் இந்த வழக்கில் மனுதார். அதே இடத்தைச் சேர்ந்த எச். பி. லொக்கு பண்டா என்பவர் இவ்வழக்கில் எதிர் மனுதார் ஆவார்.

எதிர் மனுதாரின் ஆசைநாயகியாக வாழ்ந்ததால் அவரால் தனக்குப் பிறந்த ஒருகுழந்தைக்கு தாபரிப்புக் கோரி மனுதார் இந்த வழக்கை எதிர் மனுதாரர் மீது தாக்கல் செய்திருந்தார்.

குழந்தையின் தந்தை தான் அல்ல என்று எதிர் மனுதாரர் சொன்னதைத் தொடர்ந்து வழக்கு விசாரிக்கப்பட்டது.

மனுதார் தனது சாட்சியத்தில் மேலும் கூறியதாவது:—

"எதிர் மனுதாருடன் முதல் முறையாக 1968 ஜூன் 5-ந் தேதி நான் உடலுறவு கொண்டேன். எனது தாயாரும் மூத்த சகோதரரும் இதை அறிவர்.

"ஆனால், எதிர்மனுதாரின் வேண்டுகோளுக்கு இணங்க நான் எங்கள் உறவு பற்றி ஆரம்பத்தில் தாயாரிடமோ, அண்ணனிடமோ சொல்லவில்லை.

"எதிர் மனுதாருடன் முதல் முறை உடலுறவு கொண்ட போது நேரம் பகல் 11 மணி இருக்கும். இது எங்கள் வீட்டில் நடந்தது.

"எனக்கு தொல்லைகள் ஏதும் ஏற்பட்டால் தான் கவனித்துக் கொள்வதாகவும், திருமணம் செய்வதாகவும் உறுதி அளித்தே எதிர் மனுதார் என்னுடன் உடலுறவு கொண்டார்.

"ஆனால், அவரால் எனக்குக் குழந்தை பிறக்கும் அறிகுறிகள் காணப்பட்டதும் அவர், என்னைக் கைவிட்டார். இதன் பின் நான் அம்மாவிடம் இது பற்றித் தெரிவித்தேன். அப்போது நான் ஏழு மாதக் கர்ப்பிணியாக இருந்தேன். அம்மா இது சம்பந்தமாக கிராம சேவகரிடம் முறையிட்டார்" என்றார்.

மேல் விசாரணை ஜூலை 31-ந் தேதி வரை ஒத்தி வைக்கப்பட்டது. (ஐ)

## ஆசைநாயகியுடன் ஓயாது சண்டை பிடித்து மாண்டார்

"காலஞ்சென்றவரும் நானும் ஒரு வருடமாக கணவன் மனைவியாக வாழ்ந்தோம். நாம் சட்டரீதியாக திருமணம் செய்யவில்லை. எமது பெற்றோர் இத்திருமணத்திற்கு எதிராக இருந்தபடியால், நாம் வேறு வீட்டில் வசித்தோம். மூன்று நாட்களுக்கு முன்பு நாம் மஹியங்கனைக்கு யாத்திரை போய் வந்து, சினிமாப் படமும் பார்த்தோம்.

"படம் பார்க்கும் பொழுது அங்கு வந்த என் மாமனுடன் கதைத்தேன். இதை என் கணவர் விரும்பவில்லை. திரும்பி வரும் வழியில் அன்னாசிப் பழத்தால் என் தலையில் அடித்தார். நான் விழுந்தேன். வீட்டுக்குப் போனவுடன் அடித்தார். அடுத்த இரண்டு நாட்களும் என்னை அடித்துத் துன்புறுதினார்.

"அன்றிரவு என் கழுத்தை வெட்ட வந்தார். பயந்து நான் அயல் வீட்டில் தஞ்சம் புகுந்தேன். சில நேரத்தின் பின் ஒரு போத்தலுடன் வந்து, எங்கள் முன்னால் சாகப் போவதாகக் கூறினார். பின் கிணற்றுப் பக்கம் ஓடி நஞ்சைக் குடித்து விட்டார்."

உடதும்பர திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். பி. ரம்புக்வெல, மினிப்பே உல்பொத்த வாசமையைச் சேர்ந்த எச். அபயரத்ன (22 வயது) என்பவரது மரணத்தையிட்டு விசாரணை நடாத்திய போது, காலஞ்சென்றவரின் ஆசைநாயகியான பதினறு வயது நிரம்பிய ஏ- பியசோ மெனிக்கா மேற்கண்டவாறு சாட்சியம் அளித்தார்.

ஆசைநாயகியுடன் ஏற்பட்ட ஓயாத சண்டை காரணமாக அபயரத்ன தற்கொலை செய்து கொண்டதாக தெரிவிக்கப்பட்டது.

இறந்தவரின் தந்தை ஏ. அப்புஹாமி, எஸ். எம். எச். பண்டா ஆகியோர் சாட்சியம் அளித்தபின் தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. (ஐ-15)

## பலாப்பழம் தின்ற வாலிபன் பாக்குடன் விழுந்து மரணம்

பதுளை, ஜூலை, 19

தகப்பனார் பார்க்க பலாப்பழம் தின்று கொண்டு இருந்த மகன், சில நிமிடங்களில் ஒரு குலைப் பாக்குடன் பாக்கு மரத்தில் இருந்து விழுந்து மரணமான சம்பவம் பதுல எல்லை என்ற இடத்தில் நடந்தது.

பதுளை மரண விசாரணை அதிகாரி பி. பி- ரட்னயக்க முன்னிலையில் எல்ல பதுல எல்லை டி- எம். சரத் பண்டா (வயது 14) என்ற வாலிபனின் திடீர் மரண விசாரணை நடைபெற்ற போது இத்தகவல் வெளியாகியது.

காலஞ்சென்றவரின் தந்தையான டி- எம். விமலதாச பண்டார சாட்சியம் அளிக்கையில், மாலையில் தான் பார்க்க, மகன் பலாப்பழம் தின்று கொண்டிருந்ததாகச் சொன்னார்.

சிறிது நேரத்தில் "திடீர்" என்றொரு சத்தம் கேட்டு, ஓடிப் போய்ப் பார்த்த போது மகன் பாக்கு மரத்தில் இருந்து விழுந்திருக்கக் காணப்பட்டார் என்றார்.

ஒரு குலைப் பாக்கும், கத்தியும் கீழே கிடந்ததாகவும், சிறிது நேரத்தில் உயிர் பிரிந்தது என்றும் அவர் சொன்னார்.

விபத்து மரணம் என்று தீர்ப்புக் கூறப்பட்டது. (ஐ-278)

## தீராத நோயைத் தாங்காது நஞ்சைத் தேடித் தஞ்சம்

"நிரந்தர நோயாளியாய் இருப்பதில் நிம்மதியில்லை. இந்த அவஸ்தையை விட இறப்பதே மேல். எனவே நஞ்சு குடித்துவிட்டேன் என என் மகன் வாந்தி எடுத்துக் கொண்டே கூறினார்."

மேற்கண்டவாறு இறந்தவரின் தாய் தெரிவித்தார்.

முதுபொத்கெதர ஜயவீர என்பவரின் மரணம் பற்றி கண்டி திடீர் மரண விசாரணை அதிகாரி விசாரணை நடத்தினார்.

இறந்தவரின் தாய் சாட்சியம் அளிக்கையில் மேலும் கூறியதாவது:-

"ஜயவீர என் மகன். அவர் தீராத நோய் ஒன்றால் அவஸ்தைப்பட்டார். அவர் வாந்தி எடுப்பதைக் கண்ட நான், என்ன நடந்தது என்று கேட்டேன். நிரந்தர நோயாளியாய் இருப்பதிலும் சாவது மேல் என்று கருதியபடியால் நஞ்சு குடித்ததாகக் கூறினார்" என்றார்.

முதுபொத்கெதர பியதாஸாவும் சாட்சியமளித்த பின், தற்கொலை என திடீர் மரண விசாரணை அதிகாரி தீர்ப்பளித்தார். (ஐ-15)

## பாம்பு கடித்து பெண் மரணம்

விறகு வெட்டக் காட்டுக்குச் சென்ற 50 வயதுப் பெண் நச்சுப் பாம்பால் தீண்டப்பட்டு மரணமானாள்.

அத்துருகிரிய பொலீஸ் பகுதியில் தல்தியாவெல என்னும் இடத்தைச் சேர்ந்த டபிள்யூ. லவுசா பெரேரா என்னும் பெண்ணே இப்பரிதாப மரணத்துக்கு ஆளானார். (ஐ-15)

## பெண்ணுக்கு ரூபா 500 அபராதம்

ஐம்பது கிராம் கசிப்பு, 60 கிராம் சோடா, கசிப்பு வடிக்கும் பாத்திரங்கள் ஆகியவற்றை வைத்திருந்ததற்காக முதியான்சலாகே பொடிமெனிக்கே என்னும் இளம் பெண் கைது செய்யப்பட்டார்.

அனுராதபுரம் பண்டார புளியங்குளத்தைச் சேர்ந்தவர் இவ் விளம் பெண்.

அனுராதபுரம் மேலதிக நீதவான் திரு- மேர்வி விஜயசிங்கா முன் இவர் ஆஜர் செய்யப்பட்டார். எல்லா குற்றச்சாட்டுகளையும் ஏற்றுக் கொள்ளவே, நீதவான் எதிரிக்கு ரூ. 500 அபராதம் விதித்தார். (ஐ-15)

## மனைவியை கூட்டி போக இனி என்னால் முடியாது

"இனி எந்தச் சந்தர்ப்பத்திலும் மனைவியைத் திருப்பி அழைக்க மாட்டேன். மனைவி மேல் உள்ள அன்பால் மூன்று முறை திருப்பிச் சேர்த்துக் கொண்டேன். ஆனால் மனைவி அடிக்கடி தன் தாய் வீடு போய் விடுவார். மனைவி என்னுடன் வாழவில்லை. ஒரு முறை கோர்ட்டில் வைத்தே வீட்டுக்கு அழைத்துச் சென்றேன். அதன் பின்பும் மனைவி என்னை விட்டுப் பிரிந்து சென்றார்".

மாத்தளை, டங்கன் தளனியைச் சேர்ந்த ஜயரத்தின மேற்கண்டவாறு, மாத்தளை நீதவான் திரு. சிவா செல்லையா முன்னிலையில் சாட்சியம் அளித்தார்.

இவ்வழக்கில் ஹரஸ்கமயைச் சேர்ந்த ஜி. சீலாவதி தனது கணவனிடமிருந்து தாபரிப்புக் கோரி வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

சீலாவதி சாட்சியம் அளிக்கையில் கூறியதாவது:—

"எனக்கு 20 வயது. ஒன்றரை வருடங்களுக்கு முன் அவரை மணஞ் செய்தேன். நாம் ஒரு வருடம் சந்தோஷமாக வாழ்ந்தோம். அதன் பிறகு என் கணவன் என்னை அடித்துத் துன்புறுத்திய படியால், நான் என் பெற்றோர் வீட்டிற்கு ஐந்து முறை சென்று தங்கினேன்" என்று கூறினார்.

மற்றும் சில சாட்சியங்களை விசாரித்த பின், தீர்ப்பு வழங்குவதை நீதவான் ஒத்தி வைத்தார். (ஐ-15)


தொழிலா? வியாபாரமா? காதலா?

**கவலை வேண்டாம்...**

உங்கள் பிரச்சினை எதுவானாலும் சரி, உங்கள் வாழ்க்கை மறுமலர்ச்சியடைந்து, வியாபாரத்தில் லாபம் பெற்று தொழிலில் உயர்வடைந்து, வாழ்க்கையில் வெற்றியடைந்து குடும்பத்தின் தொல்லை நீங்கி வாழ்நாள் எல்லாம் இன்புற்று வாழ தினமும் காலையிலும், மாலையிலும் உங்கள் வீட்டிலோ கடையிலோ

**ஸ்ரீ ராம வாசனைப் புகையை**

தவறாது பாவித்து பலன் அடையுங்கள்.

ஒரு மாத பாவனைக்கு ரூ. 3-25
மூன்று மாத பாவனைக்கு ரூ. 7-50

வி- பி- பி- ஒடர்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

பரீட்சை, பந்தயம், வழக்கு மற்றும் செல்லும் இடமெல்லாம் வெற்றியை தரவல்லது.

**ஸ்ரீ சரஸ்வதி இராச யந்திரம்**

(விலை ரூ. 15/50 மட்டுமே)

வேறு எந்த காரணமாயிருந்தாலும் முழு விபரங்களையும் எமக்கு எழுதி தவறாத நிவர்த்தியைப் பெறுங்கள். வசியம் சம்பந்தப்பட்ட விஷயங்கள் விசேஷமாக கவனிக்கப்படும். காதலில் வெற்றி, பெற்றோரின் விருப்பம், நிச்சயமாக பெற்றுக் கொடுக்கப்படும். இருவர் பெயர்களுடன் இலவச விபரங்களுக்கு எழுதுங்கள்.

அரசாங்க அனுமதிபெற்ற
மகா மாந்திரீகர்

**நீலன் கந்தசாமி,**

லக்ஸ்லை கட்டிடம், நிட்டம்புவ.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களுடைய விருப்பம் நிறைவேற்றப்படுகிறது

## அரசமைப்பு நிர்ணய சபையை நேற்று அங்குரார்ப்பணம் செய்து பிரதமர் பேச்சு

உலக யுத்தத்தின் பின் சுதந்திரம் அடைந்த மற்றைய நாடுகள் போல் ஸ்ரீ லங்கா மக்களும் தமக்கெனத் தாமே ஓர் அரசியலமைப்பை ஓர் அரசமைப்புச் சபை மூலம் உருவாக்க வேண்டும் எனத் தேர்ந்தெடுத்தார்கள்- மக்கள் ஆணையை ஏற்றுப் பணி புரிவதே எமது கடமையாகும்-

இவ்வாறு நேற்று அரசமைப்பு நிர்ணய சபையை அங்குரார்ப்பணம் செய்து வைத்து உரையாற்றிய பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா குறிப்பிட்டார்.

பிரதமர் தனது உரையில் கூறியதாவது—

மக்களாலேயே உருவாக்கப்படவேண்டிய அரசமைப்பு ஒன்றைப் பெற வேண்டும் என்ற அவாவை எமது மக்கள் தெளிவாகத் தெரிவித்துள்ளார்கள். அவர்களது உயர்ந்த அபிலாசைகளைப் பிரதிபலிக்கும் அவர்களின் எதிர்கால சந்ததியினர் இன்பத்துக்கும் நல்வாழ்வுக்கும் உறுதிப்படுத்த உதவும் அரசமைப்பையிட்டு, தன்மானங் கொண்ட நாட்டு மக்கள் என்ற முறையில் அவர்கள் பெருமைப்பட முடியும்.

இப்போது, இக்கூட்டத்தின் முன்னிலையிலும், இந்நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாவதை எமது மக்கள் கேட்டுக் கொண்டிருக்கும் நிலையிலும், உங்களுக்கு இப்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள தீர்மானத்தின் நியதிகளின்படி இந்த இலட்சியத்தை எய்த உடன்பாடான முதல் நடவடிக்கையை எடுக்குமாறு உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

ஸ்ரீ லங்கா மக்களின் அரசமைப்புச் சபையாக எங்களை நிறுவி, சாற்றி, பிரகடனப்படுத்துவதற்காக இங்கு கூடியுள்ளோம். இவ்வாறு எங்களை நிறுவிக் கொள்ளும் போது, அடிப்படை உரிமைகளையும், சகல பிரஜைகளின் சுதந்திரங்களையும் உள்ளடக்கிய ஒரு சோஷலிஸ ஜனநாயகத்தின் இலட்சியங்களை எய்த உறுதி பூண்ட சுயேச்சையான, தனி யாட்சியான, சுதந்திரமான, ஒரு குடியரசாக ஸ்ரீ லங்காவைச் சாற்றும் ஓர் அரசியலமைப்பை ஏற்று, நிறைவேற்றி, நிறுவுவதற்கு நாங்கள் ஒப்புக் கொள்கிறோம்.

இது நாடாளுமன்றத்தின் கூட்டம் அல்ல என்பதை வலியுறுத்தவே இங்கு இம்மண்டபத்தில் நாம் கூடி உள்ளோம்.

நாம் நிறுவுவதற்குக் கூடியுள்ள அரசமைப்புச் சபையும், அச்சபை ஏற்று, நிறைவேற்றி, நிறுவும் அரசமைப்பும் ஸ்ரீ லங்கா மக்களிடமிருந்தே அவற்றிற்கான அதிகாரத்தைப் பெறுமே தவிர, இலங்கையின் தற்போதைய அரசமைப்பை நிறுவுவதில் பிரித்தானிய அரசும் அந்நாட்டின் நாடாளுமன்றமும் பெற்றுப் பிரயோகித்த அதிகாரத்தில் இருந்தோ, ஆணையுரிமையில் இருந்தோ அல்லது அவர்கள் எமக்களித்த அரசமைப்பில் இருந்தோ அல்ல என்பதை வலியுறுத்தவே இந்நடவடிக்கையை மேற்கொண்டுள்ளோம்.

உலக யுத்தத்தின் பின் சுதந்திரமடைந்த மற்றைய நாடுகள் போல் ஸ்ரீ லங்கா மக்களும் தமக்கெனத் தாமே ஓர் அரசமைப்பை ஓர் அரசமைப்புச் சபை மூலம் உருவாக்க வேண்டும் எனத் தேர்ந்தெடுத்தார்கள்- மக்கள் ஆணையை ஏற்றுப் பணி புரிவதே எமது கடமையாகும்.


### ஒரே நாட்டினர்

எமது அரசமைப்பு எமது நாட்டின் ஒருமைப்பாட்டை பலப்படுத்த உதவும் தன்மையுள்ளதாக இருக்க வேண்டும் என்பதையே நான் எடுத்துக் கூறுவேன். எம்மிடையே வேறுபட்ட சாகியத்தினராகச் சிங்களவர், தமிழர், சோனகர், பறங்கியர், மலாயர் ஆகியோரும் மற்றோரும் பல சமயத்தினராகப் பௌத்தர், இந்து, கிறிஸ்தவர், இஸ்லாமியர் ஆகியோரர் உள்ள போதிலும் நாம் இன்றும் ஒரே நாட்டினர், என்றும் ஒரே நாட்டினராகவே வாழ வேண்டும்.

### தடை இருக்காது

அரசமைப்புச் சபையின் பணி, செயலாற்றும் முறையிலேயே நடைபெற வேண்டும் என்பதாலேயே இந்த அலுவல் அரசியல் சட்ட அலுவல் அமைச்சரினால் கொண்டுவரப்படும். இதனால் பலதரப்பட்ட கருத்துக்களைத் தெரிவிப்பதற்கும் எமது அரசியல் சட்டத்தை உருவாக்க பூரண பங்கு கொண்டு உழைத்ததற்கும் உறுப்பினருக்குள்ள சுதந்திரம் எவ்வகையிலேனும் தடைப்படுத்தப்படும் என எவரும் முடிவு செய்து விடக் கூடாது.

“நீங்கள் பரிசிலனை செய்து ஏற்றுக் கொள்ளுவதற்காக நான் இத்தீர்மானத்தை உங்களுக்குச் சமர்ப்பிக்கின்றேன்” – என்று கூறி சபையில் தீர்மானத்தை பிரதமர் வாசித்தார். (ஐ)



நவரங்கசாலையில் முன்னாள் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா வரவேற்கப்படுகிறார். திரு. பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்கா அவரை வரவேற்கிறார். (ஐ)

## மங்கள பேரிகை முழங்க புதிய சகாப்தம் உதயம்

நேற்றுப் பகல் 11-10 மணிக்கு மங்களகரமாகச் சங்கொலிக்க, மங்கள பேரிகை முழங்க, ஜெய மங்கள கீதம் நவரங்கசாலை எங்கும் எதிரொலிக்க அரசமைப்பு நிர்ணய சபை தோற்றுவிக்கப்பட்டு உலக அரசியலில் புது சகாப்தம் ஏற்படுத்தப்பட்டது.

இலங்கையைச் சுதந்திர சோஷலிஸ ஜனநாயக குடியரசாக்குவதற்கு வேண்டிய புதிய அரசமைப்புச் சட்டத்தைத் தயாரிப்பதற்கான இந்த அரசமைப்பு நிர்ணய சபை அங்குரார்ப்பண வைபவத்துக்கு எல்லா அரசியல் கட்சிகளையும் சேர்ந்த சகல நாடாளுமன்ற உறுப்பினர்களும், செனட்டர்களும், உள்ளூராட்சி மன்றத் தலைவர்களும், வெளிநாட்டுத் தூதரக அதிகாரிகளும், சமயப் பெரியார்களும், முக்கிய பிரமுகர்களும் வந்திருந்தார்கள்- சுமார் 1,500 பேர் இந்த வைபவத்தில் கலந்து கொண்டனர்.

10-55 மணிக்கு கொம்புப் பேரிகை ஒலிக்க, மக்களின் மகிழ்ச்சி ஆரவாரத்தின் மத்தியில் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயகா நவரங்கசாலை மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டார்.

அரசமைப்பு விவகார அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டீ. சில்வா, அவரின் நிரந்தரக் காரியதரிசி திரு. வால்டர் ஜயவர்தன, பொது நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டு விவகார அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா, அவரின் நிரந்தரக் காரியதரிசி திரு- பீ- மகாதேவா ஆகியோர் பிரதமரை அழைத்து வந்தனர்.

மண்டபத்தில், பொது மக்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ஆசனங்களின் முன் வரிசையில் பௌத்த, இந்து, முஸ்லிம், கிறிஸ்தவ மதப் பெரியார்கள் அமர்ந்திருந்தனர்.

அவர்களை அடுத்து வெளிநாட்டு ராஜதந்திரிகளும் பிரமுகர்கள் பலரும் இருந்தனர்.

பல்கேரிய, ருமேனிய நாடுகளின் பிரதிநிதிகள் உட்பட பல கம்யூனிஸ்ட் நாடுகளின் பிரதிநிதிகளும் வந்திருந்தனர்.

மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்களும், தொழிற் சங்கத் தலைவர்களும் வந்திருந்தனர். (ஐ)

## சகல இன மக்களும் நாட்டில் ஒன்றுபட வழி அமைகிறது

—என். எம்.

“வேறுபட்ட கலாசாரங்களை உடைய பல இன மக்கள் வாழும் எங்கள் நாட்டைப் போன்ற நாடுகளில், சகல இன மக்களும், சகல மத மக்களும் என்றென்றும் ஒற்றுமையாக வாழ வேண்டியது அவசியம். அதற்கான சூழ்நிலையை உருவாக்கக் கூடிய வழிவகையை நாம் ஆக்கிக்கொள்ள வேண்டியதும் அவசியமாகும்.”

இவ்வாறு தெரிவித்தார் நிதி அமைச்சரும், லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவருமான டாக்டர் என். எம். பெரேரா.

நேற்று நவரங்கசாலையில் நடைபெற்ற அரசமைப்பு நிர்ணய சபையின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பேசுகையிலேயே டாக்டர் பெரேரா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:—

“இந்த நாட்டின் சகல இன மக்களும் ஒற்றுமையாக வாழ வேண்டும். அதற்கேற்ப நாட்டின் அரசியல் முறை மாற்றப்பட வேண்டும் என்றே காலஞ்சென்ற திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவும் விரும்பினார்.

“திரு. பண்டாரநாயக்காவின் விருப்பத்தை அவரது துணைவியார் இப்போது அமுல் செய்ய நடவடிக்கை எடுத்திருப்பது எங்கள் அதிர்ஷ்டமே” என்றார். (ஐ)

## டட்லிக்கு வரவேற்பு

பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா நேற்று நவரங்கசாலை மண்டபத்தினுள் அழைத்து வரப்படுவதற்குச் சில நிமிடங்களுக்கு முன் முன்னாள் பிரதமர் திரு. டட்லி சேனநயக்கா வந்தார்.

பொது நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டு அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவால் வரவேற்கப்பட்டபின் திரு. சேனநாயக்கா உள்ளே சென்றார்.

மண்டபத்தினுள் பாதித் தூரம் சென்றதும் திரு. அனுரா பண்டாரநாயக்காவை திரு. சேனநாயக்கா சந்தித்தார். இருவரும் நெருங்கி அளவளாவினர். (ஐ)

இப் பத்திரிகையை அச்சிட்டவர் சுயாதீனப் பத்திரிகா சமாஜம், 5, குணசேனமாவத்தை, கொழும்பு - 12 (இலங்கை)- வெளியிட்ட திகதி 20 ஜூலை 1970,
Thanthi 5, Gunasena Mawatha, Colombo 12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org